


**28. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவோருக்கு பல்கலைக் கழகங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டுமென குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் நாடுதழுவிய கருப்பை வாய் புற்றுநோய் H P V தடுப்பூசி திட்டத்தை இன்று தொடங்கிவைத்தார்.

3. தேசிய அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் நான்காயிரத்து 335 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு உள்ளதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. நலம் காக்கும் மருத்துவமுகாமில் 18 லட்சத்து 52 ஆயிரம் பேர் பயனடைந்திருப்பதாக மாநில அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு துணைத்தலைவர்

தொழில்நுட்ப தலைமைத்துவம், ஒருங்கிணைந்த வளர்ச்சி, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, சமூக நல்லிணக்கம் உள்ளிட்டவற்றை வளர்ச்சியடைந்த இந்தியா உறுதிசெய்வதாக குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

டெல்லி பல்கலைக்கழகத்தின் 122-வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவோருக்கு பல்கலைக் கழகங்கள் முன்னுரிமை அளிக்கவேண்டுமென கேட்டுக் கொண்டார்.

நாட்டில் உயர்கல்வி பயிலும் மகளிரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய அவர், 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மகளிர் தங்கப்பதக்கம் பெற்றுள்ளது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார்.

மாணாக்கர் தங்கள் கடமைகளை உணர்ந்து நாட்டின் வளர்ச்சிக்கு பொறுப்புடன் பணியாற்றுவதன் அவசியத்தையும் குடியரசு தலைவர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திர மோடி ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் நாடுதழுவிய கருப்பை வாய் புற்றுநோய்க்கான HPV தடுப்பூசி திட்டத்தை இன்று தொடங்கிவைத்தார்.

நாடுமுழுவதும் பெண்களின் நலவாழ்வை மேம்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள இந்த திட்டத்தின் அடையாளமாக 14 வயதுடைய சிறுமிகளுக்கு HPV தடுப்பூசி செலுத்தப்படுவதை பார்வையிட்ட பிரதமர் அவர்களுடன் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒவ்வொரு ஆண்டும் 14 வயதுடைய ஒருகோடியே
15 லட்சம் சிறுமிகள் பயனடையவுள்ளனர்.

தொடர்ந்து அஜ்மீரில், 16 ஆயிரத்து 680 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதனைத் தொடர்ந்து குஜராத் செல்லும் பிரதமர், சனந்தில், 22 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டிலான நாட்டின் முதலாவது செமி கண்டக்டர் உற்பத்தி மற்றும் விநியோக மைய செயல்பாடுகளை தொடங்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இந்திய மருத்துவ சங்கம்

நாடுமுழுவதும் இளம் பெண்களுக்கு இலவச H P V தடுப்பூசி வழங்குவதற்கான மத்திய அரசின் முடிவை இந்திய மருத்துவ சங்கம் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு I M A எழுதியுள்ள கடிதத்தில் இந்த தடுப்பூசி திட்டத்தின் மூலம் லட்சக்கணக்கான பெண்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் மதுரை

பிரதமர் திரு.நரேந்திரமோடி மதுரையில் நான்காயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு நாளை அடிக்கல் நாட்டுகிறார்.

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் தரிசனம் மேற்கொள்ளும் பிரதமர், மதுரை மண்டேலா நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

மதுரை, ராமேஸ்வரம், தனுஷ்கோடி இடையேயான முக்கிய ஆன்மீக நகரங்களை இணைக்கும் சாலைத் திட்டங்கள், பரமக்குடி, ராமநாதபுரம் நான்குவழி பாதை, பிரதமரின் கதிஷக்தி திட்டத்தின் கீழ் ரயில், சாலை, விமானம் மற்றும் துறைமுக போக்குவரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக அம்ருத் பாரத் ரயில் நிலைய திட்டத்தின் கீழ் ஸ்ரீவில்லிபுத்தூர், மணப்பாறை, சோழவந்தான், திருவாரூர் ரயில் நிலையம் உள்ளிட்ட மேம்படுத்தப்பட்ட 8 ரயில் நிலையங்களையும் பிரதமர் காணொலி வாயிலாக திறந்து வைக்கிறார்.

பொது ஒலிபரப்பு சேவைகளை வலுப்படுத்தும் வகையில் கும்பகோணம், ஏற்காடு, வேலூர், ஆகாஷவாணி பண்பலை சேவைகளையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

தேசிய அறிவியல் தினம்

தேசிய அறிவியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

ராமன் விளைவை கண்டுபிடித்த நோபல் பரிசு பெற்ற இயற்பியல் விஞ்ஞானி சர்.சி.வி.ராமனின் நினைவை போற்றும் வகையில் ஆண்டுதோறும் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் தேச வளர்ச்சி மற்றும் உலகளாவிய நன்மைக்காக இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்து ஆராய்ச்சி சுற்றுச்சூழல் அமைப்புகளை வலுப்படுத்த உறுதிபூண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

மத்திய ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில் சர்.சி.வி.ராமனின் மரபு மற்றும் அவரது ராமன்வளைவு கண்டுபிடிப்பின் உந்துசக்தி மூலம் புதிய இந்தியாவை தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துடன் உருவாக்குவோம் என்று கூறியுள்ளார்.

"அறிவியலில் மகளிரின் பங்கு" என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் பள்ளி மாணாக்கரின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியை திருமதி. பாரதி தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

DRDO

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் DRDO ஒடிஷா மாநிலம் சந்திப்பூர் ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து மிகக்குறுகிய வான் பாதுகாப்பு அமைப்பில்

தொடர்ச்சியாக 3 விமான சோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டது.

மிகக்குறுகிய வான் பாதுகாப்பு அமைப்பின் திறனை மறுமதிப்பீடு செய்வதற்காக இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த சோதனையின் போது அதிவேக எதிரி விமானங்களை இடைமறித்து அழிக்கும் ஒத்திகை துல்லியமாக நடத்தப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் நான்காயிரத்து 335 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை மயிலாப்பூரில் கிராமக்கோவில் பூசாரிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், 8 ஆயிரத்து 440 கோடி ரூபாய் மதிப்பிலான,

8 ஆயிரத்து 140 ஏக்கர் கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கிராம கோவில் பூசாரிகளின் நலனிற்காக பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்ட முதலமைச்சர்,

பொங்கல் திருநாளுக்கு புத்தாடைகள்,

பூசாரிகளின் வாரிசுகளுக்கு வழங்கக்கூடிய 50 ஆயிரம் ரூபாய், ஒருலட்சமாக உயர்வு,

ஈமச்சடங்கு தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்,

ஆண்டுதோறும் 500 பூசாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும்,

அவர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை உள்ளிட்ட 11 அறிவிப்பகளை முதலமைச்சர் வெளியிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

சுப்ரமணியன்

தமிழ்நாட்டில் நலம் காக்கும் மருத்துவமுகாமில் 18 லட்சத்து
52 ஆயிரம் பேர் பயனடைந்திருப்பதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை தேனாம்பேட்டையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், ஊரக, குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இதுவரை ஆயிரத்து 256 முகாம்கள் நடத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

K.K.S.S.R.

சமுதாய வளைகாப்பு அனைத்து சமூகங்களை இணைத்து கர்பிணி பெண்களுக்காக தமிழக அரசு நடத்தும் நிகழ்வு என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. KKSSR ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் 100 கர்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖

விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டத்தில் பிரதமரின் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் 719 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

திருச்செந்தூர்

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் மாசி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பச்சை சாற்றி சப்பர வீதி உலா இன்று நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் வட்டார விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தை ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பெரம்பலூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மூத்த குடிமக்களுக்கு மார்ச் மாதத்திற்கான ரேஷன் பொருட்கள் வரும் திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் வழங்கப்பட உள்ளதாக அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖